# 1974- ஆம் ஆண்டு தேசியக் கொடியை ஏற்றி வைத்து முதல்வர் கலைஞர் உரை...!

முதல் பக்கத் தொடர்ச்சி

இதைத் தொடர்ந்து 1974- ஆம் ஆண்டு சுதந்திர தினத்தன்று சென்னை கோட்டையில் முதல் அமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தேசியக் கொடி ஏற்றினார்.

அப்போது முதல்வர் கலைஞர் அவர்கள் பேசியதாவது:-

“இந்தியப் பெருநாடு விடுதலை பெற்ற இந்தத் திருநாளில் என் அன்பு வாழ்த்துகளை தமிழ்நாட்டு மக்களுக்குத் தெரிவித்துக்கொண்டு, வீர சுதந்திரம் வேண்டி நின்று விடுதலைப் போரில் வீழ்ந்துபட்டமான மறவர்களுக்கும் தியாகச் செம்மல்களுக்கும் வணக்கத்தைச் செலுத்துகிறேன்.

**பிரதமர் இந்திரா காந்தி அம்மையாருக்கு நன்றி!**

மண் மீட்க எழுந்த போராட்டத்தின் முடிவில் வெற்றிக்களிப்புடன் விண்முட்டப் பறந்து பட்டொளி வீசும் இந்தியத் தேசியக் கொடியை மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநிலத்தின் முதல் அமைச்சர்கள்தான் இந்த நாளில் ஏற்றி வைக்க வேண்டும் என்று தமிழ்நாடு அரசு எழுப்பிய உரிமைக் குரலைப் புறக்கணிக்காமல் ஒப்புதல் தந்த மத்திய அரசுக்கும், இந்திய பிரதமர் இந்திரா காந்தி அம்மையாருக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்

“உறவுக்கு கை கொடுப்போம் - உரிமைக்குக் குரல் கொடுப்போம்” என்ற நமது உறுதி படைத்த உள்ளத்திற்குக் கிடைத்த “விடுதலை நாள் பரிசு” இதுவென எண்ணி மகிழ்கிறோம்.

**அழகு படக் கூறிய அண்ணா!**

அண்ணல் காந்தி அடிகளும் ஆசிய ஜோதி நேருவும், திலகரும், தீனபந்துவும், திறன்மிகு சிதம்பரனாரும், தியாகச் செம்மல் பெரியாரும், வித்தகர் ராஜா ஜியும், வீரர் நேத்தாஜியும் எண்ணற்ற இந்தியப் பெரு வீரர்களும் சிந்திய ரத்தத்தில் பூத்த புரட்சி மலர்தான் இந்த நாட்டின் சுதந்திரம்.



சென்னை செங்கோட்டையில்,,1974 ஆகஸ்ட் 15- ஆம் தேதி முதல் - அமைச்சர் கலைஞர் அவர்கள் தேசிய கொடி ஏற்றிய போது எடுத்த படம்.

அந்த மலரின் மணம், மாளிகைகளில் பலகணி வழியாக தென்றலில் தோள் மீது ஏறி, வசதி படைத்தோருக்கு மட்டுமே கிட்டும் என்ற நிலையை மாற்றி, ஏழை வீட்டுச் சாளரங்களிலும் நுழைந்திடும் வண்ணம் செய்திடல் வேண்டும்.

இதைத்தான் அறிஞர் அண்ணா அவர்கள். 1947 ஆகஸ்டு 15 அந்நிய ஆதிக்கத்துக்குக் கணக்குத் தீர்த்த நாள் என்றும், ஒவ்வொரு ஆண்டும் கொண்டாடுகிற ஆகஸ்டு 15 சுதந்திரத்தின் பயன்களைக் கணக்குப் பார்க்கிற நாள் என்றும் அழகுபடக் கூறினார்கள்.

**கட்டபொம்மனை மறக்கவில்லை!**

சுதந்திர முழக்கம் செய்த தியாகசீலர்கள் எவரையும் இந்த அரசு மறக்கவில்லை - மதிக்கத் தவறவில்லை. வெள்ளையரை எதிர்த்து முதல் குரல் ஒலித்த வீரபாண்டியக் கட்டபொம்மனின் அழிந்து போன பாஞ்சாலங்குறிச்சியை இதோ - மீண்டும் உருவாக்கிவிட்டோம்; அந்த தீரனின் திருநாமம் என்றும் மறையாதிருக்கும் வகையில்! தில்லையாடி வள்ளியம்மைக்கு நினைவுச் சின்னம் எழுப்பியிருக்கிறோம்.

சிதம்பரனார் புகழ்பாட, அவர் சிறையில் இழுத்த செக்கைக் கண்டுபிடித்து சென்னை மாநகரில் காட்சிக்கு வைத்திருக்கிறோம். கவிதை வடிவில் விடுதலை போர்க்கருவிகளைத் தயாரித்துக் கொடுத்த கவியரசன் பாரதிக்கு சிலை மட்டுமல்ல; எட்டயபுரத்தில் அவர் பிறந்த வீட்டை நினைவுச் சின்னமாக்கியிருக்கிறோம்.

மூதறிஞர் ராஜாஜிக்கு நாம் எழுப்பும் நினைவாலயம் முடியும் தருவாயிலிருக்கிறது.

**தியாகிகளுக்கு மானியம்!**

ஏழாயிரத்துக்கு மேற்பட்ட தியாகிகளுக்கு திங்கள்தோறும் மானியம் - தமிழ்நாடு அரசின் சார்பில் விடுதலைப் பட்டயம் - இப்படி கடமைதவறாது - அந்நாளில் சுதந்திரப் போர்க்களம் கண்டவர்க்கு வழங்கிடும் அன்புக் காணிக்கையை இந்த அரசு தட்டாமல் தயங்காமல் வழங்கி வருகிறது.

வெள்ளையர் ஆதிக்கத்தை வெளியேற்றுவது மட்டும் சுதந்திரத்தின் நோக்கமல்லவே! மக்களுக்குச் சுகவாழ்வு அளித்திடத் தொண்டாற்றி அதில் வெற்றி காண்பதும் முக்கிய குறிக்கோள் அன்றோ!

ஒரு நாட்டுக் குடிமகனின் இன்றியமையாத தேவைகளான உணவு, உடை, உறையுள் - இவைகளை நிறைவு செய்வதில் நாம் முழு வெற்றி பெற்றுவிட்டோமா? இல்லை என்றுதானே பதில் எழுந்து தொல்லை தருகிறது மனத்துக்கு!

தமிழகத்தைப் பொறுத்த வரையில் - நமது அதிகாரம், நமது வசதி வாய்ப்புக்களுக் கேற்றவாறு இயன்றவரையில் ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண முயன்று வருகிறோம். அடித்தளத்து மக்கள், தாழ்த் தப்பட்ட மக்கள், பிற்படுத்தப் பட்ட மக்கள், ஏழை எளியோர் மேன்மை பெற நமது திட்டங்கள் தீட்டப்படுகின்றன.

**சமூக விரோத சக்திகள் தோற்கடிக்கப்பட்டுவிட்டன!**

தன்னிறைவுடன் விளங்கிய தமிழ் மாநிலத்தில் விளங்கிய உணவுப் பிரச்சினை நமக்கு வேதனையளிக்கும் ஒரு சம்பவம்! சமுதாயத்தின் தேவைகளை தனியொருவன் தன் சுயநலத்திற்காகச் சுருட்டிக் கொள்ள முற்படுவதால் ஏற்படும் தீமைகளில் ஒன்றுதான் இந்த உணவுப் பிரச்சினை!

பிரச்சினையைக் கண்டு ஓடாமல் ஒளியாமல் அல்லது அலட்சியப்படுத்தாமல் அரசு எடுத்த நடவடிக்கைகள் - பொதுமக்கள் தந்த ஒத்துழைப்பு - இவைகளின் காரணமாக - சமூக விரோத வன்முறைச் சக்திகள் தோற்கடிக்கப்பட்டு விட்டன.



பதுக்கல் பூதங்கள் - கடத்தல் - பிசாசுகள் - தங்கள் பேழைகளை நிரப்பிக் கொள்ள ஏழைகளின் வயிற்றில் அடிப்பது, மன்னிக்க முடியாத துரோகம் அவர்கள் கடுமையான சட்டத்துக்குள், பொறியில் அகப்பட்ட எலிபோல் ஆக்கப் படுவார்கள் என்பதை இந்த நாளில் நான் எச்சரிக்காமல் இருக்க முடியாது. எதையும் பேசித் தீர்க்க முன்வராமல் சட்டத்தின் சந்து பொந்துகளில் நுழைய முனைவது -சமுதாய நலனுக்காக செய்யப்படும் காரியங்களைத் தடுக்கக் குறுக்கே நின்று மிரட்டுவது - இவைகளை இந்த அரசு, தயவு தாட்சண்யமில்லாமல் சந்திக்கும், சமாளிக்கும் என்பதை உறுதியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

**சுதந்திரம் – எல்லா மக்களுக்கும் தான்!**

**ஒருவர் வாழ – ஒருவர் வீழ அல்ல!**

**சிற்றூரும் வரப்பெடுத்த வயலும் ஆறு தேக்கிய நல்வாய்க் காலும் நெற்சேர உழுது உழுது பயன் விளைக்கும் நிறை உழைப்புத் தோள்களுக்கு பயன் படாத சுதந்திரம்–**

**பொற்றுகளைக் கடல் முத்தை, மணிக்குலத்தைப் போய் எடுக்க மூச்சு அடக்கியோர்க்குப் பயன்படாத சுதந்திரம் –**

**பாலைவனத்து நிலவாகத் தான் கருதப்படும் –**

**அதனைச் சோலைவனத்து சுந்தர நிலவாக்க இந்த நாளில் அனைவரும் உறுதி எடுப்போம்.**

**இந்தியாவை ஒளி பொருந்திய நாடாகத் திகழ வைப்போம்!**

விலைவாசி ஏற்றம் - வேலை இல்லாத் திண்டாட்டம் - எனும் வேதனைச் சூழலுக்கிடையே சுதந்திரத் திருநாள் எனும் மகிழ்ச்சி ஒரு தேன்துளிதான் எனினும் அதன் சுவை குன்றிடும் எனக் கூறுவார் இல்லை.

ஆயினும் தேசிய அளவில் மிகப் பெரியதொரு பொருளாதார மாற்றத்தைச் செய்து தீரவேண்டிய கட்டத்தில் இருக்கிறோம் என்பதை மறந்திடலாகாது. அரசியல் அமைப்பிலும், பொருளாதாரத் துறையிலும் துணிந்து எடுக்கின்ற புரட்சிகரமான நடவடிக்கைகளின் மூலமே இந்தியாவை ஒளி பொருந்திய நாடாகத் திகழ வைக்க முடியும். இந்த அசைக்க முடியாத பேருண்மைக்குத் தலை வணங்கி, தொண்டினைத் தொடர்வோம்! தூய நல் விளைவுகளைச் சேர்ப்போம் என்று கூறி என் இதய வாழ்த்துகளை அனைவருக்கும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முத்தமிழறிஞர் முதல்வர் கலைஞர் அவர்கள் கூறினார்.

**வெள்ளையர் ஆதிக்கத்தை வெளியேற்றுவது மட்டும் சுதந்திரத்தின் நோக்கமல்லவே! மக்களுக்குச் சுக வாழ்வு அளித்திடத் தொண்டாற்றி அதில் வெற்றி காண்பதும் முக்கிய குறிக்கோள் அன்றோ!**

**ஒரு நாட்டுக் குடிமகனின் இன்றியமையாத தேவைகளான உணவு, உடை, உறையுள் – இவைகளை நிறைவு செய்வதில் நாம் முழு வெற்றி பெற்றுவிட்டோமா? இல்லை என்றுதானே பதில் எழுந்து தொல்லை தருகிறது மனத்துக்கு!**

**தமிழகத்தைப் பொறுத்த வரையில் – நமது அதிகாரம், நமது வசதி வாய்ப்புக்களுக் கேற்றவாறு இயன்றவரையில் ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண முயன்று வருகிறோம். அடித்தளத்து மக்கள், தாழ்த் தப்பட்ட மக்கள், பிற்படுத்தப் பட்ட மக்கள், ஏழை எளியோர் மேன்மை பெற நமது திட்டங்கள் தீட்டப்படுகின்றன.**

---

## 78-வது சுதந்திர தின விழாவையொட்டி - இன்று

# முதல்வர் மு.க.ஸ்டாலின் கோட்டை கொத்தளத்தில் தேசியக் கொடியேற்றுகிறார்!

## பல விருதுகள் வழங்கி சுதந்திர தின உரை நிகழ்த்துகிறார் முதல்வர்!

**சென்னை, ஆக. 15 -**

**நாட்டின் 78-வது சுதந்திர தினத்தை முன்னிட்டு இன்று (ஆகஸ்ட் 15) கோட்டை கொத்தளத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தேசியக் கொடியை ஏற்றி வைத்து, விருதுகளை வழங்கி, சுதந்திர தின உரை நிகழ்த்துகிறார்.**

குடியரசுத் தினத்தன்று மாநில ஆளுநர்கள் தேசியக் கொடியை ஏற்றி வைப்பதைப் போன்று சுதந்திரத்தினத்தன்று அந்தந்த மாநிலங்களில் அம்மாநில முதலமைச்சர்கள் தேசியக் கொடியை ஏற்றி வைக்கும் உரிமையைப் பெற்றுத் தந்தார் தமிழினத் தலைவர் கலைஞர் அவர்கள்.

இந்திய நாட்டின் 78-வது சுதந்திர தினம் இன்று (ஆகஸ்ட் 15ஆம்) நாடு முழுவதும் கொண்டாடப் படுகிறது. இதையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைநகர் சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையில் அமைந்துள்ள கொடி மேடையில் இன்று (15.08.2024) காலை 9 மணிக்கு தேசியக் கொடியை ஏற்றி வைத்து சுதந்திர தின உரை நிகழ்த்துகிறார்.

ஒவ்வொரு ஆண்டும் சுதந்திர தின விழாவில் சிறந்த சமூக சேவகர், சிறந்த தொண்டு உள்ளிட்ட பல விருதுகள் வழங்கப்படும். சமூக சேவகருக்கு ரூ.50 ஆயிரம் ரொக்கமும், தொண்டு நிறுவனத்துக்கு ரூ. 1 லட்சம் ரொக்கமும், சான்றிதழும் வழங்கப்பட்டு வருகிறது.

**தகைசால் தமிழர் விருது!**

மேலும் 2021ம் ஆண்டு முதல் தமிழ்நாடு அரசு தகைசால் தமிழ் விருதை வழங்கி வருகிறது. அதன்படி இந்த ஆண்டு தமிழக காங்கிரஸ் முன்னாள் தலைவர் - இலக்கியச் செல்வர் குமரி அனந்தன் அவர்களுக்கு தகைசால் தமிழர் விருதினை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இந்த ஆண்டு வழங்கி சிறப்பிக்கிறார்.

இதைத் தொடர்ந்து ஏ.பி.ஜே. அப்துல் கலாம் விருது, தைரியம் மற்றும் துணிச்சலுக்கான கல்பனா சாவ்லா விருது, சிறப்பாகச் செயல்படும் 3 அரசுத் துறைகளுக்கான முதலமைச்சர் நல்லாட்சி விருது, மருத்துவர்கள், நிறுவனங்கள், சமூகப் பணியாளர்கள், ஊனமுற்றோர், சமூக நலன் மற்றும் சிறப்புமிக்க சேவைக்கான கூட்டுறவு வங்கி விருதுகள், சிறந்த மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் நகரங்களுக்கான விருதுகளையும் இவ்விழாவில் முதல்வர் அவர்கள் வழங்குவதுடன். மேலும், குழந்தைகளுக்கு முதல்வர் அவர்கள் இனிப்புகளை வழங்குகிறார்கள்.

**வண்ணமயமான விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டுள்ளன!**

சுதந்திர தினத்தையொட்டி, செயின்ட் ஜார்ஜ் கோட்டை மற்றும் தலைமைச் செயலக கட்டிடம் ஆகியவை வண்ணமயமான விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டுள்ளன. கோட்டை அரண்களுக்கு முன்பாக மூன்று பிரமாண்ட மேடைகள் கட்டப்பட்டு நிகழ்ச்சியைக் காண ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இதுதவிர பாதுகாப்பு ஏற்பாடுகளும் பலப்படுத்தப்பட்டுள்ளன.

**9000 போலீசார் பாதுகாப்பு!**

தமிழகத்தைப் பொறுத்தவரை விழா நடக்கும் சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையைச் சுற்றி 5 நிலை பாதுகாப்பு வளையம் அமைக்கப்பட்டுள்ளது. இதுதவிர சென்னையில் 9000 போலீசார் பாதுகாப்பு மற்றும் கண்காணிப்பு பணியில் ஈடுபடுத்தப்பட உள்ளனர். சென்னை விமான நிலையத்தில் 7 அடுக்கு போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. மேலும், சென்ட்ரல், எழும்பூர் உள்ளிட்ட சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் உள்ள அனைத்து ரயில் நிலையங்கள் மற்றும் விமான நிலையங்களிலும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

சுதந்திர தின விழா நடைபெறுவதையொட்டி, நிகழ்ச்சி நடைபெறும் இடம் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் போக்குவரத்தில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. சுதந்திர தின விழாவின் இறுதி ஒத்திகை தலைமைச் செயலகம் முன் நடைபெற்றது.

**அமைச்சர் எ.வ.வேலு ஆய்வு!**

நாடு முழுவதும் 78வது சுதந்திர தின விழா இன்று கோலாகலமாக கொண்டாடப்படுகிறது. சென்னை கோட்டை கொத்தளத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தேசியக் கொடியை ஏற்றிவைத்து, விருதுகளை வழங்க உள்ளார். இந்நிலையில், சுதந்திர தினவிழா நடைபெறும் புனித ஜார்ஜ் கோட்டையில், நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை அமைச்சர் எ.வ.வேலு ஆய்வு செய்தார். அதனைத் தொடர்ந்து செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர், சுதந்திர தினவிழா நிகழ்ச்சிகளை பொதுமக்கள் கண்டு களிக்கும் வகையில் அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டு இருப்பதாகத் தெரிவித்தார்.